
127.

அறிவொளி
சிறுவர்
இலக்கியக் கதைத் தொடர் 1

# தெனாலிராமன் கதைகள்



விலை 20/=

எட்டு வயதுக்கும் பதினைந்து வயதுக்கும் உட்பட்ட சிறுவர்களுக்கு உகந்த நூல். பாடசாலைத் துணைநூல் வரிசையை சேர்ந்தது.

தொகுப்பாக்கம்: கலாநிதி பொன் சக்திவேல்

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
P.O. BOX NO. 162, COLOMBO - 11.
TELE: 434770, 074 - 718592.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52

# தெனாலிராமன் கதை

## இளமைப்பருவம்

தெனாலிராமன் என்றாலே சிரிப்புதான் தோன்றும். அந்த அளவுக்கு தெனாலிராமன் நகைச்சுவையில் பெயர பெற்றவன்.
மற்றவர்களைச் சிரிக்க வைப்பதே தன் தொழிலாகக் கொண்டிருந்தவன். விகடகவி என்று லோகமாதா பராசக்தியாலே பட்டம் பெற்றவன்.

விஜய நகர சாம்ராஜ்யத்தை 16ம் நூற்றாண்டில் கிருஷ்ண தேவராயர் என்பவர் ஆண்டு வந்தார். அவருடைய அவையிலே விதூஷகனாக விளங்கினான் தெனாலிராமன். மன்னர் உட்பட அனைவரையும் தன் பேச்சாலும், செயலாலும் சிரிக்க வைப்பதில் வல்லவனாய் திகழ்ந்தான்.

கிருஷ்ண ஜில்லா காலபடு என்னும் ஒரு சின்ன கிராமத்தில் இராமையா என்ற அந்தணர் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவி லட்சுமியம்மாள். இவர்கள் குடும்பத்தில் வறுமை கோரத்தாண்டவமாடியது. அந்த நேரத்தில் தான் இராமன் அவர்களுக்கு மகனாகப் பிறந்தான். அவனுக்கு தெனாலி என்ற ஊரிலுள்ள இராமலிங்க சுவாமிகளின் பெயரையே வைத்தனர். அதுவே தெனாலிராமன் என்றாயிற்று.

அவன் பிறந்த மூன்றாம் நாளிலேயே இராமையா காலரா நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தார். ஏற்கனவே வறுமையில் வாடி வதங்கிப்போன லட்சுமியம்மாள் மேலும் துன்புற்றாள். பிறந்த குழந்தையைக் காப்பாற்ற சக்தியற்றவளாய் தான் பிறந்த தெனாலியிலுள்ள தன் சகோதரன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

தெனாலிராமன் தன் மாமன் வீட்டில் வளர்ந்து வந்தான். அவன் மற்ற பிள்ளைகளைப்போல் இல்லாது குறும்பும் சேஷ்டைகளும் அதிகம் புரிந்து வந்தான். அவனுடைய செயல்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆத்திரமூட்டுவதாக இருந்தாலும் மற்றவர்களுக்கு கேளிக்கை விருந்தாக இருந்தது.

B/C 12/5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய வயதில் அவன் பள்ளியில் சேர்க்கப்பட்டான். ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் பாடத்தில் அவன் கவனம் செலுத்த மாட்டான். மாணவர்களிடம் குறும்புத்தனம் செய்துகொண்டும், பரிகாசமாக பேசிக் கொண்டும் இருப்பான். அவனால் மற்றப் பிள்ளைகளும் படிப்பில் கவனம் செலுத்தாமல் போய்விட்டது. ஆசிரியர் அவனைப் பலவாறு கண்டித்தார். அப்போதும் திருந்தவில்லை.

தாயும், மற்ற உறவினர்களும் கூறிய புத்திமதிகளைக் கூட அவன் ஏற்கவில்லை. கோமாளித்தனமாக பேசி மற்றவர்களை வயிறு குலுங்க சிரிக்க வைப்பான். இதனால் அவன் குடும்பத்தில் இருந்த வறுமையும் வேதனையும் அவனுக்கு பெரிதாகத் தோன்றவில்லை. விளையாட்டுப் பிள்ளையாகவே இருந்து வாலிபனாக வளர்ந்தான்.

அவனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று அவன் தாயாருக்கு ஆசை இருந்தது. அதன்படி செய்தும் வைத்தாள். கமலா என்ற பெண் அவனுக்கு மனைவியாக வாய்த்தாள். அப்பொழுதுங்கூட அவன் திருந்தவில்லை. குடும்பக் கஷ்டத்தைப் போக்க அவன் எண்ணவில்லை. இருந்தாலும் அவனுடைய கோமாளித்தனத்தைக் கண்டு அவன் மனைவி கூட தன் குடும்பக் கஷ்டத்தைப் பெரிது படுத்தாமல் இருந்து வந்தாள். இப்படியே அவன் எந்தத் தொழிலிலும் ஈடுபடாமல் குடும்பத்திற்கும் உதவாமல் திரிந்து வந்தான்.



**(தென்னாலி இராமன் பத்திரகாளியின் ஆசி பெறல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடை காலம் வந்தது. பருவத்தில் மழை பெய்யாததால் ஊரில் வறட்சி மிகுந்தது. குடிமக்கள் குடிக்கும் தண்ணீருக்கே அல்லல்பட வேண்டியதாயிற்று. மக்கள் மிகவும் துன்புற்றனர்.

அச்சமயத்தில் அந்த ஊருக்கு ஒரு சன்னியாசி வந்தார். அவர் வந்த வேளையில் அந்த ஊரில் பெருமழை பெய்தது. அதைக் கண்டு மக்கள் துள்ளிக் குதித்தனர். சன்னியாசி வந்த நேரம் தான் ஊரில் மழை பெய்தது என்று அவரைப் பெரிதும் மதித்தனர். ஊர்மக்கள் ஒன்று சேர்ந்து சன்னியாசியிடம் சென்று அவரைப் பலவாறு புகழ்ந்தனர்.

ஆனால் இராமன் மட்டும் அவர்கள் கூற்றை மறுத்தான். சன்னியாசி வந்ததால் மழை பெய்தது என்பது சுத்தப்பொய். 'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது' என்று சொல்லும் கதை போல் தான் இது' என்று நகைச்சுவையுடன் கூறி கேலி செய்தான்.

இதைக் கேட்ட அனைவரும் சிரித்தனர். தன் பெருமையை உணராத இராமனைக் கண்டு சன்னியாசி கோபிக்கவில்லை. அவரும் சிரித்தார். அவனுடைய துணிச்சலையும், அறிவாற்றலையும் கண்டு வியந்தார்.

அச்சமயத்தில் அந்த சன்னியாசிக்கு வயது ஆகியிருந்தது. அத்துடன் அவருடைய இறுதிக்காலம் மிக நெருக்கத்தில் இருந்தது என்பதை ஊகித்துக் கொண்டார். அதுவரை அவர் எந்த சீடனையும் தன்னுடன் வைத்திராது தனியராய் ஊர் ஊராய்ச் சுற்றித் திரிந்து வந்தார்.

இப்பொழுது அவருக்கு அந்திமக் காலம் நெருங்கி விட்டதால் தனக்குத் தெரிந்த மந்திரத்தை யாருக்காவது உபதேசிக்க வேண்டும். அப்படி செய்யாது அவர் இறந்து விட்டால் மறுபிறவியில் அரக்கனாய் பிறக்க நேரும். அதனால் தனக்குத் தெரிந்த மந்திரத்தை இராமனுக்கு உபதேசிக்க அவர் விரும்பி அவனைத் தனியே அழைத்தார். இராமனும் சன்னியாசி அழைக்கிறாரே என்று அவருடன் சென்றான்.

"இராமா! எனக்கு இறுதி காலம் நெருங்கி விட்டது எனக்கு வேறு சீடர்கள் இல்லாத காரணத்தினால் உனக்கு சில மந்திரத்தை உபதேசிக்கிறேன். இன்றிரவு நள்ளிரவில் காளி கோயிலுக்குச் சென்று காளியின் முன் நின்று வணங்கி நான் சொல்லும் மந்திரத்தை ஆயிரத்தெட்டு முறை கூறினால் காளி உனக்கு தரிசனம் தருவாள். நீ அவளுடைய கோர ரூபத்தைக் கண்டு பயப்படாமல் வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரத்தைப் பெற்றுக் கொண்டு சுகமாக இரு'' என்று கூறி மந்திரத்தை உபதேசித்தார்.

இராமனுக்கு ஒரே வியப்பாக இருந்தது. மந்திரத்தைக் கூறினால் காளி வருவாளா? ஆச்சரியமாக இருக்கிறதே என்று நினைத்தான். இருந்தாலும் சன்னியாசி சொன்னபடி அன்றிரவு காளி கோயிலுக்குச் சென்று மந்திரத்தைக் கூறினான்.

அவ்வளவுதான்! பத்ரகாளி அவன்முன் காட்சியானாள். கண்களில் நெருப்புப்பொறி பறக்க நீண்ட பற்களிலிருந்து இரத்தம் சொட்ட இரண்டு கைகளும் ஆயிரம் தலைகளும் கொண்டவளாய் கோர ரூபத்துடன் இருந்தாள்.

தன் கையிலிருந்த் சூலாயுதத்தை ஓங்கி தரையில் குத்தினாள். அந்த இடமே அதிரும்படி சிரித்தாள். அவளுடைய தோற்றத்தைக் கண்டு அனைவருமே நடுங்கிப்போவர். ஆனால் இராமன் காளியின் முகங்களையும் தோற்றத்தையும் ஏற இறங்கப் பார்த்தான். அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. மேலும் கீழுமாக பார்த்துச் சிரித்துக் கொண்டே இருந்தான்.

காளிக்குக் கோபம் அதிகமாயிற்று. பத்ரகாளியான தன்னைக் கண்டு மானிடன் ஒருவன் சிரிப்பதா என்று அவன் மீது சீறினாள். 'அடேய்! என்னைப் பார்த்து நீ சிரிப்பதா?' என்று கேட்டாள்.

அப்பொழுதும் இராமன் சிரித்துக் கொண்டே "தாயே எனக்கு ஒரு தலையும் இரண்டு கைகளும் இருக்கின்றன. ஜலதோஷம் பிடித்து விட்டால் தலையிலுள்ள ஒரு மூக்கை சிந்த இந்த இரண்டு கைகள் போதவில்லை. ஐயோ பாவம்! உனக்கு ஆயிரம் முகங்கள் இருக்கின்றன. ஜலதோஷம் பிடித்து விட்டால் ஆயிரம் கைகள் போதுமா? உங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்குமே! என்று நினைத்துப் பார்த்தேன்! சிரிப்பு வந்தது'' என்று கூறி மேலும் சிரித்தான்.

இதைக் கேட்டு பத்ரகாளியும் சிரித்து விட்டாள். "இராமா! கடவுளான என்னைப் பார்த்ததும் நீ வரம் கேட்பதை விட்டு விட்டு என்னுடைய தோற்றத்தைக் கண்டு பரிகாசம் செய்து என்னையே சிரிக்க வைத்தாய்! உன்னுடைய திறமையை நான் பாராட்டுகிறேன்! இன்று முதல் நீ விகடகவியாக விளங்குவாய்'' என்ற பட்டத்தை அளித்தாள்.

விகடகவி என்ற பட்டத்தைக் கேட்டதும் "தாயே! சரியான பெயர் கொடுத்திருக்கிறாய்! அந்த எழுத்தை எப்படித் திருப்பி படித்தாலும் விகடகவி தான்!'' என்று சொல்லி மீண்டும் சிரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய அறிவாற்றலைக் கண்டு மகிழ்ந்தாள் காளி. அவள் தன்னுடைய வலது கையிலும் இடது கையிலும் இரண்டு பொற்கிண்ணங்களை எடுத்துக் காட்டி, "விகடகவி என்னுடைய வலது கையில் பால் இருக்கிறது. இதை அருந்தினால் உனக்கு ஞானம் கிடைக்கும். இடது கையில் தயிர் இருக்கிறது. இதை அருந்தினால் செல்வம் பெருகும். இவற்றுள் எது வேண்டுமோ அதை எடுத்து அருந்து" என்று கூறினாள்.

இராமன், 'தாயே! இரண்டில் எது ருசியாக இருக்கும் என்று நான் எப்படி தெரிந்து கொள்ள முடியும்? குடித்துப் பார்த்தால் தானே தெரியும்' என்று கூறி இரண்டு கிண்ணத்தையும் எடுத்து பாலையும், தயிரையும் மடமடவென்று குடித்து விட்டான்.

பின்பு அவனே தொடர்ந்து கூறினான்.

"தாயே! அறிவும் செல்வமும் இருந்தால் தான் வாழ்க்கை நல்ல முறையில் இருக்கும். அதனால் எனக்கு வாழ்க்கை நல்ல முறையில் இருக்கும். அதனால் எனக்கு அறிவும் வேண்டும்; செல்வமும் வேண்டும். அதனால் இரண்டையும் குடித்து விட்டேன்! இவ்வாறு செய்ததில் ஒன்றும் தவறு இல்லையே!" என்று கேட்டான்.

காளி அவன் அறிவாற்றலையும் செயலையும் கண்டு மகிழ்ந்து அவன் விகடகவியாக சிறந்து விளங்குவான் என்று வாழ்த்திவிட்டு மறைந்தாள்.

## பழிக்குப்பழி

19/5
B/c 26/5

கிருஷ்ணதேவராயர் சிறப்புற ஆட்சி புரிந்து வந்தார். அவர் தம் அவையில் புலவர்களுக்கும் கல்வி கற்ற அறிஞர் பலருக்கும் மதிப்பளித்து இடமளித்திருந்தார். இதையறிந்த இராமன் தேவராயரின் அவையில் சேர்ந்து விட விரும்பினான். அதனால் தன் ஊரிலிருந்த சொத்துகளை விற்று பணமாக்கிக் கொண்டு தன் தாயார், மனைவி, குழந்தையுடன் விஜயநகரத்திற்கு பயணமானான்.

அங்கு அவனுக்குத் தெரிந்தவர்கள் யாரும் கிடையாது. அதனால் தன் குடும்பத்தாருடன் ஒரு விடுதியில் தங்கினான். பின்பு அரச அவையில் சேரும் வழி என்ன என்று யோசித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(தென்னாலி இராமன் அரன்மனையில்)

தேவராயரின் அவையில் தரத்தாச்சாரி என்பவர் இராஜகுருவாக இருந்து வந்தார்.அவர் அரசரின் நன்மதிப்பை பெற்றவர். அவர் சொல்லி விட்டால் போதும்! அரசர்தப்பாமல் செய்து விடுவார் என்ற சங்கதி இராமனுக்குத் தெரிய வந்தது. அதனால் முதலில் அவருடைய தயவைப் பெற்று விடுவதே நல்லது என்ற எண்ணத்தில் அவர் மாளிகைக்குச் சென்றான்.

இராஜகுரு தம் மாளிகையில் இருக்கும்போதே அவரை நாடி பலரும் வந்த வண்ணமிருப்பர். அதனால் அவரது மாளிகையில் கூட்டம் நிறைந்திருக்கும். இராமன் சென்ற போதும் ஏராளமான பேர் அவருடைய தரிசனத்திற்காக காத்துக் கிடந்தனர்.

இராமனுக்கு ஒன்றும் புரியவில்லை. முன்பின் அறிமுகமில்லாதவனான அவனால் இராஜகுருவைப் பார்ப்பது கடினம் என்று தோன்றிற்று. அதனால் தான் இராஜகுருவின் சீடன் என்ற பொய்யைக் கூறி காவலரிடம் அனுமதி கேட்டான். அப்பொழுதும் அவர்கள் தடுத்தனர். இருந்தும் கேளாது இராஜகுரு இருந்த இடத்திற்கு சென்று விட்டான்.

அங்கு பலர் அவரை சூழ்ந்திருந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அவரை புகழ்ந்து கொண்டிருந்தனர். அந்த புகழ்ச்சியில் மெய்மறந்திருந்தார் தரத்தாச்சாரி. இதைக் கண்டதும் இராமன் இவர் புகழுரைக்கு எளிதில் பணிந்து விடுவார் போலிருக்கிறது என்று ஊகித்துக் கொண்டு அருகில் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்தாச்சாரி இராமனை யாரென்று தெரியாமல் பார்த்தார். ஆனால் இராமனோ அவரைப் பற்றி அதிகம் தெரிந்தவன்போல, 'கருணைவள்ளலே! உங்களைப்போன்ற தியாக உள்ளம் கொண்டவர்களை நான் இதுவரை பார்த்ததில்லை. நீங்கள் மாபெரும் மேதை' என்று பாராட்டினான்.

அவன் கூறிய பாராட்டைக் கேட்டு மகிழ்ந்தார் எனினும் முன்பின் அறிமுகமில்லாதவன் இப்படி புகழ்வானேன் என்று புரியாமல் விழித்தார் இராஜகுரு.

"குருதேவா! நான் உங்களுடைய உண்மையான சீடன். என் பேச்சினால் மற்றவரை சிரிக்க வைக்க முடியும். அதனால் தாங்கள் கருணை வைத்தால் என்னை அரசவையில் விகடகவியாக சேர்த்து விடலாம்.பிறகு நான் உங்களை இதைவிட பன்மடங்கு புகழ்ந்து கொண்டு இருப்பேன்'' என்று பெருமையாகக் கூறினான் இராமன்.

இராஜகுரு இராமனின் பேச்சாற்றலையும் திறமையையும் கண்டு வியந்தார். உண்மையிலேயே இவன் திறமையுள்ளவன் தான் என்பதை அறிந்தார்: இவனை அரசவையில் சேர்த்து விட்டால், இவனால் தன்னுடைய செல்வாக்கும் மதிப்பும் குறைந்து விடுமோ என்று அஞ்சினார். அறிவாளிகள் தம்மைவிட அறிவாளிகளுக்கு ஆதரவளித்தால் அவர்கள் முட்டாளாகி விடுவார்கள்.இதைக் கருத்தில் கொண்ட இராஜகுரு அவனுக்கு உதவ விரும்பவில்லை.

"முட்டாளே! நீ யார்? என்று எனக்குத் தெரியாது. முதலில் இங்கிருந்து போய்விடு'' என்று விரட்டினார். அப்பொழுதும் அவன் நகரவில்லை. அதனால் அங்கிருந்த காவலாளிகளுக்கு உத்தரவிட்டார். காவலாளிகள் இராமனை அங்கிருந்து இழுத்துச் சென்று வெளியில் தள்ளினர். அவனைப் பார்த்து அங்கிருந்த அனைவரும் ஏளனமாக சிரித்தனர்.

இராமனுக்கு அவமானமாகி விட்டது. ஏ!இராஜகுருவே! என்னையா அவமானப்படுத்தினாய்? உன்னுடைய தயவு இல்லாமலேயே அரசரின் மதிப்பைப் பெற்று விகடகவியாக சேருவேன். என்னை முட்டாள் என்று கூறிய உன்னையும் மற்றவர்களையும் முட்டாளாக்குகிறேன் பார்! உன்னைப் பழிக்குப்பழி வாங்காமல் விடமாட்டேன்'' என்று தன்னுள் சபதம் செய்து கொண்டு அங்கிருந்து சென்றான்.

கிருஷ்ணதேவராயரின் அவை திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. அரசர் தம் மந்திரி பிரதானிகள் சூழ சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். அன்று மாயவித்தைக்காரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் தன் செப்பிடு வித்தைகளைக் காட்டிக்கொண்டிருந்தான். அதைக் கண்டு அனைவரும் ரசித்துக் கொண்டிருந்தனர். இந்த வித்தைக்காரனை சிபாரிசு செய்தது இராஜகுரு தரத்தாச்சாரிதான்.

வித்தை நடந்து கொண்டிருக்கும்போது இராமன் அங்கு சென்றான். அவனுடைய வித்தைகளைப் பார்த்து அனைவரும் பலவாறு பாராட்டினர். அதைக் கண்டு பூரித்துப்போனான் வித்தைக்காரன். அவனுக்கு ஆணவம் தலைக்கேறியது. அதனால், "இது போன்ற வித்தைகளை செய்ய வேறு யாராலும் முடியாது.அரசரும் இதுபோன்ற வித்தைகளை இதுவரை பார்த்திருக்க முடியாது. அதற்கு ஆயிரம் பொன்னைப் பரிசாகக் கொடுக்க வேண்டும்" என்று பெருமையாகக் கூறிக் கொண்டான்.

அச்சமயத்தில் இராமன் சபைக்கு நடுவில் வந்தான் வித்தைக்காரனைப் பார்த்து, "ஐயா நீ செய்து காட்டிய வித்தைகள் மிகவும் நன்றாக இருந்தன. ஆனால் நான் கண்ணை மூடிக் கொண்டு ஒரு காரியத்தைச் செய்கிறேன். அதையே நீ கண்ணைத் திறந்து கொண்ட செய்ய வேண்டும். முடியுமா உன்னால்" என்றான்.

வித்க்கைக்காரனுக்கு சிரிப்பும் ஆத்திரமுமாக வந்தது. சிறுபையனாக இருக்கும் இவன் நமக்குச் சவால் விடுகிறானே என்று நினைத்து ஏளனமாக, "பொடிப்பயலே! நீ கண்ணை மூடிக் கொண்டு செய்யும் காரியத்தை என்னால் கண்ணைத் திறந்து கொண்டு செய்ய முடியாதா? என்று கேட்டான்.

"முடிகிறதா என்று பார்! நீ ஜெயித்தால் மன்னர் கொடுக்கும் ஆயிரம் பொன்னை நீ எடுத்துக் கொள். நீ தோற்றால் நான் எடுத்துக் கொள்வேன் சம்மதமா?" என்றான். அதற்கு ஜாலவித்தைக்காரனும் சம்மதித்தான்.

மன்னர் உட்பட அனைவரும் என்ன நடக்கப்போகிறதோ என்று ஆவலுடன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இராமன் மைதானத்திலிருந்து இரு கைகள் நிறைய மணலை அள்ளிக் கொண்டு, தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு, அதன் மீது கொட்டிக் கொண்டான். 'நான் இப்போது செய்தது போல நீ இரு கண்களையும் திறந்து கொண்டு செய்ய வேண்டும்' என்றான் இராமன்.

வித்தைக்காரனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. திருதிருவென்று விழித்தான். அவையிலிருந்த அனைவரும் கொல்லென்று நகைத்தனர். அரசர் மகிழ்ந்து ஆயிரம் பொன்னை இராமனுக்க் கொடுத்தார். மறுநாளும் சபைக்கு வரும்படிக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனின் இந்த செய்கை இராஜகுருவுக்கு அவமானமாக இருந்தது. தான் சிபாரிசு செய்த வித்தைக்காரனை தோல்வியடையச் செய்து விட்டானே என்று அவன் மீது ஆத்திரங் கொண்டார்.

மறுநாளும் அரசவையில் இராஜகுரு சிபாரிசு செய்த தத்துவஞானி ஒருவரின் சிறப்புரை நடந்து கொண்டிருந்தது. அச்சமயம் இராமன் சபையினுள் சென்றான். "கண்களால் பார்ப்பது, நாக்கினால் சுவைப்பது போன்று நாம் அனுபவிப்பதாகச் சொல்லும் ஒவ்வொன்றும் நாம் நினைக்கும் எண்ணங்களினால் ஏற்படுகிறதேயன்றி உண்மையில் அல்ல. அவை யாவும் வெறும் பிரமையே" என்று வாதம் புரிந்தார். இதை அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டுமென்பது அவரது எண்ணம்.

அதற்கேற்ப எவரும் மறுத்து ஒன்றும் பேசவில்லை. தெனாலிராமன் குறுக்கிட்டான். "நாம் சுவைப்பத் சாப்பிடுவது எதுவும் உண்மை இல்லையா? வெறும் பிரமைதானா? நாம் சாப்பிடுவதற்கும் சாப்பிடுவதாக நினைப்பதற்கும் கூட வித்தியாசம் கிடையாதா?" என்று கேட்டான்

தத்துவஞானி, "இல்லை! சாப்பிடுவது, சாப்பிடுவதாக நினைப்பது இவை இரண்டும் ஒன்றே!" என்று திட்டவட்டமாக கூறினார்.

இதைக் கேட்டதும் தெனாலிராமன் அங்கு கூடியிருந்தோரைப் பார்த்து, "அன்று மன்னர் நமக்கெல்லாம் விருந்து ஏற்பாடு செய்திருக்கிறார். அதில் அறுசுவை உணவும் பரிமாறப்படும். நாம் அனைவரும் அதில் கலந்து கொண்டு ருசித்துச் சாப்பிடுவோம். ஆனால் இந்தத் தத்துவஞானி மட்டும் சாப்பிடாது சாப்பிடுவதாக நினைத்துக்கொண்டு வயிறு நிறைகிறாரா பார்ப்போம்' என்று சொன்னான்.

சபையில் கூடியிருந்தோர் ஒரே சமயத்தில் சிரித்தனர். இதைக்கண்டு தத்துவஞானி வெட்கத்தால் தலை குனிந்தார்.இராஜகுருவுக்கும்கூட அவமானமாகப் போய்விட்டது. தேவராயர் இராமனின் நகைச்சுவை ஆற்றலைக் கண்டு மகிழ்ந்து அவனைப் பாராட்டி அன்று முதல் தம் சபையில் ஆஸ்தான விகடகவியாக்கிக் கொண்டார். இராஜகுருவால் மறுத்துக் கூறமுடியவில்லை. தன்னால் விரட்டப்பட்டவன் விகடகவியாகி விட்டானே என்று தன்னுள் குமுறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடுகண்ட பூனை



(தென்னாலி இராமன் பால் கறக்கும் காட்சி)

விஜயநகரத்தில் எப்படியோ எலிகளின் எண்ணிக்கை பெருகி விட்டன. தானியங்களையும் இதரப் பொருள்களையும் கடித்து நாசப்படுத்தி வந்தன. எலிகளை ஒழிப்பதற்குரிய வழிமுறைகளை அரசர் தன் அவையில் உள்ள மந்திரி பிரதானிகளுடன் கலந்து ஆலோசித்தார். அவர்கள் பூனைகளைப் பெருமளவில் வளர்த்தால் எலிகளின் தொல்லை தீரும் என்று கூறினர். அதுவே சிறந்த யோசனை என்று அரசரும் ஏற்றார்.

அதன்படி பெர்ஷிய நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான பூனைகள் தருவிக்கப்பட்டன. அரசாங்க பொறுப்பில் எல்லாப் பூனைகளையும் வளர்ப்பதைவிட மக்கள் ஒவ்வொரு வீட்டிலும் பூனைகளை வளர்ப்பது சிறந்தது என்ற எண்ணத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பசுவும் கொடுக்கப்பட்டது. பசுவின் பால் பூனைக்கு கொடுத்து நல்ல முறையில் வளாக்க வேண்டம் என்று அரசர் ஆணை பிறப்பித்தார்.

ஒவ்வொருவரும் பசுவின் பாலை பூனைக்கு கொடுத்து வளர்த்து வந்தனர். ஆனால் தெனாலிராமன் பூனைக்கு பாலைக் கொடுப்பது வீண் என்று நினைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் பாலைக் கறந்து, தானும், தம் குடும்பத்தாருக்குமே குடிக்க பயன்படுத்தினான்.

சில நாட்களுக்குப் பிறகு ஒருநாள் மன்னர் ஒவ்வொருவரும் வளர்த்து வரும் பூனைகளை அரண்மனைக்கு அழைத்து வரும்படிக் கூறினார். அவர் கட்டளைப்படி அனைவரும் தத்தம் பூனைகளைக் கொண்டுவந்தனர். அரசர் எல்லாப் பூனைகளையும் பார்வையிட்டார்.

எல்லாப் பூனைகளும் கொழுகொழுவென்று இருந்தன. ஆனால் தெனாலிராமன் வளர்த்து வந்த பூனை மட்டும் எலும்பும் தோலுமாக இருந்தது. அரசருக்கு கோபம் ஏற்பட்டது. வறுமையில் வாடியுள்ள மக்கள் வளர்த்துள்ள பூனைகளெல்லாம் கொழுகொழுவென்றிருக்கும்போது தெனாலிராமன் வளர்த்து வந்த பூனை மட்டும் ஏன் இப்படி இருக்கிறது என்ற கோபத்துடன் ராமனை அழைத்தார்.

"இராமா! பூனைக்கு பால் கொடுத்தாயா? இல்லையா? எதற்காக இப்படி இருக்கிறது?' என்று வினாவினார். அதற்கு தெனாலிராமன், "அரசே! நான் என்ன செய்ய முடியும்? பூனைக்கு பால் தான் வைக்க முடியும். அது குடித்தால் தானே! நீங்கள் கொடுத்த பாலைக் கண்டாலே ஓட்டம் பிடிக்கிறதே" என்று வருத்தத்துடன் கூறினான்.

அவன் கூறியதைக் கேட்டு அரசர் வியப்படைந்தார்."என்ன பாலைக் கண்டு பூனை ஓடுகிறதா? பால் குடிக்காத பூனையும் இருக்கிறதா? நீ சொல்வது உண்மை என்றால் உனக்கு நூறு பொற்காசு பரிசாக அளிக்கிறேன்.

அரசர் அந்த பூனையின் முன்னால் பாலை வைக்கும் படி கட்டளையிட்டார். சேவகன் ஒருவன் ஒரு கிண்ணத்தில் பாலை கொண்டு வந்து வைத்தான். பாலைக் கண்டதும் பூனை ஓட்டம் எடுத்தது. இந்த நிகழ்ச்சி அரசருக்கும், மற்றவருக்கும் வியப்பாக இருந்தது. சேவகர்கள் அந்த பூனையைப் பிடித்து வந்து சோதித்துப் பார்த்தனர். அதன் வாயினுள் வெந்தப்புண் இருப்பதைக் கண்டனர்.

அதைக் கண்டதும் தெனாலிராமன் பூனைக்கு சுடச்சுட பாலை வைத்து குடிக்கச் செய்திருக்கிறான், அதனால் வாய்ப்புண்ணாகி சூடுகண்ட பூனை பாலைக் கண்டதும் ஓட்டம் எடுக்கிறது என்பதை அறிந்து கொண்டனர்.

அரசருக்கு அவன் மீது அடங்காத கோபம் ஏற்பட்டது. "நீ என்ன காரியம் செய்திருக்கிறாய், உனக்கு பூனையோடு பசுவையும் கொடுத்து இதற்கு பாலூற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கச் சொன்னால் இப்படிச் செய்து விட்டாயே என்று சீறினார்.

தெனாலிராமனுக்கு பயம் மேலிட்டது எனறாலும் சாதுரியமாகவும் பணிவுடனும், ''அரசே பூனைக்கு பாலூற்றி வளர்ப்பதைவிட குடிமக்கள் பால் அருந்தி வந்தால் திடகார்த்தியாக இருப்பார்கள். அவ்வாறு மக்கள் நல்ல முறையில் இருக்க செய்வதே மன்னரின் முதற் கடமை அல்லவா? இதை நான் சொல்வதற்காக மன்னித்து விடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான்

அவன் கூற்றிலும் நியாயம் இருப்பதை அறிந்தார் மன்னர். அவனுடைய அறிவக்கூர்மையைப் பாராட்டினார். தான் ஏற்கனவே கூறியபடி நூறுபொன் பரிசளித்து கௌரவித்தார்.

## புரோகிதர்களுக்கு இரும்புச்சூடு



(மன்னர் அந்தணர்களுக்கு பொன் மாங்கனி அளித்தல்)

ஒரு சமயம் கிருஷ்ணதேவராயரின் தாயின் திதி வர இருந்தது. அரசர் புரோகிதர்களை அழைத்து அதற்கு ஆலோசனை செய்தார் என் தாயார் இறப்பதற்கு சற்று முன் சாப்பிட ஒரு மாம்பழம் வேண்டும் என்றார். அதைக் கொண்டு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதற்கு முன் அவர் ஆத்மா பிரிந்து விட்டது. அதனால் அவருடைய ஆத்மா சாந்தியடைய நான் என்ன செய்யலாம் என்று கேட்டார்.

புரோகிதர்களுக்கு பேராசை மிகுந்தது. அதனால் அவர்கள் "மன்னரே!இந்த திதி நாளில் உங்கள் தாயார் விரும்பிய மாங்கனிகளைப்போன்று நூற்றியெட்டு மாங்கனிகளைப் பொன்னால் செய்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வெள்ளித்தட்டில் வைத்து நூற்றி எட்டு அந்தணர்களுக்கு தானமாகக் கொடுத்தால் தங்கள் தாயாரின் ஆத்மா குளிர்ந்து விடும்" என்று கூறினர்.

மன்னர் மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. அவ்வாறு செய்வதென்று ஒப்புக் கொண்டார். திதி நாளில் நூற்றி எட்டு பொன்னால் செய்த மாங்கனிகளை வெள்ளித்தட்டில் வைத்து நூற்றி எட்டு அந்தணர்களுக்கு தானமாகக் கொடுத்தார்.அந்தணர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் பெற்றுச் சென்றனர்.

அதைக் கண்ணுற்றான் தெனாலிராமன். புரோகிதர்களின் அளவுக்கு மீறிய ஆசையைக் கண்டு அவர்களுக்கு தகுந்த பாடத்தைக் கற்பிக்க விரும்பினான். அதன்படி தன்னுடைய தாயாருக்கும் திதி என்று கூறி பிராமணர்களையெல்லாம் தன் வீட்டிற்கு அழைத்தான்.

பிராமணர்களும் தங்களுக்கு ஏதாவது தானம் கிடைக்கும் என்று நம்பி தெனாலிராமன் வீட்டிற்கு வந்தனர்.

தெனாலிராமன் அவர்களையெல்லாம்தன் வீட்டினுள் அழைத்து நெருப்பில் ஒரு இரும்பு கரண்டியைப் பழுக்கக் காய்ச்சி ஒவ்வொருவர் கையிலும் சூடு போட்டு அனுப்பினான். அந்தணர்கள் துடிதடித்தனர். அப்பொழுதும் அவர்களை விடவில்லை.

அந்தணர்கள் கூட்டமாகச் சென்று அரசரிடம் முறையிட்டு அழுதனர். அரசருக்கு தெனாலிராமன் மீது அடங்காத கோபம் ஏற்பட்டது. அவனை உடனே அழைத்து வரும்படி செய்தார். அவனும் வந்து அவர் முன் நின்றான்.

"இராமா! நீ செய்தது சரிதானா? ஏதுமறியா அந்தணர்களை இவ்வாறு செய்தது ஏன்?" என்று கேட்டார்.

இறப்பதற்கு முன் அவர்களுக்கு வலிப்பும், இழுப்பும் ஏற்பட்டுவிட்டது. அப்பொழுது அவள் அடுப்பில் கரண்டியைக் காய்ச்சி என் கையில் சூடு போடுங்கள். வலிப்பும் இழுப்பும் நீங்கி விடும் என்று கதறினாள். நானும் அவ்வாறே கரண்டியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சிக் கொண்டு வந்தேன். ஆனால் அதற்குள் அவள் ஆவி பிரிந்து விட்டது. ஆகவே அவளுடைய ஆத்மா சாந்தியடைய என்ன வழி என்று தெரியாமல் இதுகாறும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். தாங்கள் தங்களுடைய தாயார் கேட்டபடி மாங்கனிகளை தானமாகக் கொடுத்து அவளுடைய ஆத்மா சித்தியடையச் செய்ததுபோல் நானும் என் தாயார் கேட்டபடி சூடுபோட்டு அவளுடைய ஆத்மா சாந்தியடையச் செய்தேன். இதில் ஏதேனும் தவறு உள்ளதா? என்று மன்னரைக் கேட்டான்.

அவன் கூறியதைக் கேட்டு அவையிலுள்ள அனைவரும் சிரித்தனர். பேராசை கொண்ட புரோகிதர்களுக்கு இது வேண்டுமென நினைத்தனர்.

## பேராசையின் அழிவு

B/C - 11/6/2002

ஒரு சமயம் தெனாலிராமனுக்கு காய்ச்சல் ஏற்பட்டது. அந்தக் காய்ச்சல் இரண்டொரு நாட்களில் தீராமல் பல நாட்கள் தொடர்ந்திருந்தது. இராமனால் கண் விழிக்கக்கூட முடியாத அளவுக்கு கடுமையான காய்ச்சல். தன் கணவனின் இந்த நிலையைக் கண்ட அவன் மனைவி பயந்து விட்டாள். ஏதோ ஒரு தோஷத்தினால் தான் தன் கணவனுக்கு இவ்வாறு இருக்கிறது என்ற கவலையில் புரோகிதரை அழைத்து தோஷபரிகாரம் கேட்டாள்.

ஏற்கனவே இராமனால் சூடுபட்ட அவர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக போய்விட்டது. இராமனை வஞ்சம் தீர்த்துக் கொள்ள எண்ணி, "உன் கணவன் அந்தணர்களுக்கு சூடு போட்டது பெரிய அபவாதம். அதனாலேயே இந்தக்காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதற்கு பிராயச்சித்தமாக அந்தணருக்கு நூறு பொன் தட்சணை கொடுத்தால் நீங்கும்'' என்று கூறினான்.

இராமனின் மனைவி வருந்தினாள்.எங்களிடம் நூறு பொன் இல்லையே! என்ன செய்வது! ஆனாலும் என் கணவர் குணமடைய வேண்டுமே'' என்று குழம்பினாள். அப்பொழுது அவளுக்கு தங்களிடமுள்ள குதிரையின் நினைவு வந்தது. அந்தணரிடம், 'ஐயா! எங்களிடம் குதிரை ஒன்று இருக்கிறது. அதை விற்றாவது பணம் தருகிறோம்' என்றாள்.

அவள் இதைக் கூறியதும் அந்தணருக்குப் பேராசை ஏற்பட்டது. இராமனிடமுள்ள குதிரை இருநூறு பொன்னுக்காவது விற்கும். அதனால் அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே அடைய விரும்பினார். அந்தக் குதிரை என்ன விலைக்கு விற்றாலும் அதை அப்படியே எனக்குத் தர வேண்டும். இதற்கு உறுதியளித்தால்தான் தோஷப்பரிகாரம் செய்வேன்'' என்ற நிபந்தனை விதித்தார். அவன் மனைவியும் அதற்கு சம்மதித்தாள்.

சில நாட்களில் இராமன் காய்ச்சல் நீங்கி குணமடைந்தான். அதற்குள் புரோகிதர் குதிரையை விற்றுப் பணம் தரும்படி பல முறை கேட்டுவிட்டார். அவருடைய தொந்தரவு பொறுக்கமுடியாத இராமன் ஒருநாள் தன் குதிரையுடன் தன் வீட்டிலிருந்த ஒரு பூனையையும் கூட்டிக் கொண்டு சந்தைக்குச் சென்றான். அவனுடன் புரோகிதரும் சென்றார்.

இராமன் கொண்டு சென்றது அரேபிய குதிரை. விலை அதிகம் போகக் கூடியது. அதனால் இராமன் அவ்வளவு பெரிய தொகையை புரோகிதருக்கு கொடுக்க விரும்பவில்லை. எனவே, சந்தையில் பூனையையும், குதிரையையும் சேர்த்து விற்க முற்பட்டான். பூனையின் விலை இருநூறு பொன் என்றும் குதிரையின் விலை ஒரு காசு என்றான். பூனையை வாங்குபவர்களுக்குத்தான் குதிரையைக் கொடுக்க முடியும் என்ற நிபந்தனை விதித்தான்.

குதிரையை வாங்க விரும்பியவர் எப்படியிருந்தால் என்ன என்று பூனையோடு குதிரையையும் சேர்த்து இருநூறு பொன் ஒரு காசுக்கு வாங்கினார். பூனையை விற்ற இருநூறு பொன்னை தன்னிடம் பத்திரப்படுத்திக் கொண்டு குதிரையின் விலையான ஒருகாசை புரோகிதரிடம் கொடுத்தார். புரோகிதர் ஒன்றும் பேச முடியாமல் வாயடைத்தார்.

ஏமாற்ற நினைத்து ஏமாந்து போனோமே என்று தன் பேராசையினால் விளைந்த அழிவைக் கண்டு வருந்தினார் புரோகிதர்.

## இராஜகுருவுக்கு தண்டனை

B/C 27/04/2003

விஜயநகரத்தை அடுத்து ஒரு நதி இருந்தது. இராஜகுரு தரதாச்சாரியார் எப்பொழுதும் அங்கு நீராடுவது வழக்கம். இதைப் போன்று அன்றும் தம் ஆடைகளையெல்லாம் களைந்து நதிக்கரையில் வைத்துவிட்டு நீரில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராத விதமாக தெனாலிராமன் இந்தப் பக்கமாக வர நேர்ந்தது. இராஜகுரு நதியில் ஆடைகளின்றி நீராடிக் கொண்டிருப்பதைக் கண்டார். முன்பு ஒரு சமயம் தனக்கு உதவ மறுத்ததோடு அவமானப்படுத்திய அவரை பழிவாங்க இதுவே சரியான சந்தர்ப்பம் என்று நினைத்தான்.

மெதுவாக கரையிலிருந்த அவருடைய ஆடைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு நகர்ந்தான். இராஜகுரு அவன் செய்கையைப் பார்த்து அலறினார். "இராமா! என் ஆடைகளைக் கொடுத்து விடு" என்று கேட்டார். ஆனால் அவன் கொடுக்க மறுத்தான். அவர் கெஞ்சினார்.

இராமன், "இந்த நதி கன்னிப் பெண்கள் நீராடக் கூடிய இடமாகும். இதில் வந்து நீங்கள் நீராடியதே ஒரு குற்றமாகும். இதை நான் வெளியில் சொன்னால் உங்களுக்கு அவமானம் ஏற்படும். அதனால் நீங்கள் ஒரு நிபந்தனைக்குக் கட்டுப்பட வேண்டும். செய்கிறேன் என்று சத்தியம் செய்து கொடுத்தால் தான் உங்கள் ஆடைகளைத் திருப்பிக் கொடுப்பேன்" என்றான்.

இந்த சமயத்தில் சத்தியம் செய்து கொடுப்பதைத் தவிர வேறு வழியறியாத இராஜகுரு, "சத்தியம் செய்து தருகிறேன்! என்ன செய்ய வேண்டும்" என்றார்.

"என்னை உங்கள் தோள்மீது சுமந்துக் கொண்டு இராஜ வீதி வழியாக பவனி வரவேண்டும்" என்றான். அவரும் தலையெழுத்தே என்ற சம்மதித்தார். அதன் பிறகு அவன் ஆடைகளைக் கொடுத்தான்.

இராஜகுரு இராமனை தோள்மீது சுமந்துக் கொண்டு இராஜ வீதி வழியாக வருவதைக் கண்டு ஊரிலுள்ளோரும், காவலாளிகளும் பார்த்து வியந்தனர். அச்சமயத்தில் அரண்மனை மேல் மாடத்தில் நின்று கொண்டிருந்த அரசர் கூட கவனித்து விட்டார். அவர் பார்த்ததை தெனாலிராமனும் கண்டுராகொண்டான்.

நாட்டின் சட்டப்படி ஒருவர் தோள் மீது மற்றொருவர் ஏறிசெல்வது குற்றமாகும். அதனால், "தோள் மீது ஏறி உட்கார்ந்து வருபவன் யாராக இருந்தாலும் அவனை என் முன் இழுத்து வாருங்கள்" என்று காவலாளிகளுக்கு அரசர் ஆணையிட்டார்.

தெனாலிராமனுக்கு ஏதாவது ஒரு விபரீதம் நடக்கும் என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதனால் அவன் திடீரென்ற இராஜகுருவின் தோளிலிருந்து கீழே இறங்கினான். அவருடைய கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். தான் செய்த அபசாரத்திற்கு பரிகாரம் பண்ண வேண்டும் என்று தன்தோள்மீது அவரை அமர்த்திக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கலானான்.

இராஜகுருவுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. இராமனுக்கு புத்திவந்தது என்று நினைத்து பெருமையாக அவன் தோள்மீது அமர்ந்து வந்தான்.

அந்தச் சமயத்தில் அங்கு வந்த காவலாளிகள் மன்னரின் உத்தரவுப்படி இராஜகுருவை இறக்கி நன்றாக அடித்து பின் அரசர் முன் கொண்டு சென்றனர். அரசருக்கு ஒன்றும் புரியவில்லை.

'இராஜகுருவா இப்படி செய்தது' என்று வியப்புற்றார். உடனே இராஜகுரு "மன்னரே! இராமன் என்னை ஏமாற்றி விட்டான். வழியில் சாக இருப்பவனை போல நடித்தான். தன்னால் நடக்க முடியவ்ல்லை என்று வருத்தப்பட்டான். அதனால் இரக்கப்பட்டு இவனை என் தோளின் மீது சுமந்து வந்தேன். அரண்மனைக்கு அருக்ல் வந்ததும், அவனே வல்ய வந்து என்னை அவன் தோளின் மீது ஏற்றிக் கொண்டான்" என்றார். தான் நதியில் நீராடிய உண்மையை மறைத்து விட்டார்.

மன்னருக்கு இராஜகுரு கூறியதைக் கேட்டதும் ஒரு பக்கம் சிரிப்பு வந்தது. இராஜகுருவை அவமதித்தது மட்டுமின்றி அரண்மனை ஆட்களைக் கொண்டே உதை வாங்கும்படி செய்தானே என்று அவன் மீது ஆத்திரமும் ஏற்பட்டது.

## குதிரையை வளர்த்த விதம்

B/C 20/04

விஜயநகர கிருஷ்ணதேவராயருக்கு நீண்ட காலமாக பாமினி அரசின் மீது தீராத பகை இருந்து வந்தது. அந்நாட்டை எந்த வகையிலாவது வெல்ல வேண்டுமென்று எண்ணினார். அதனால் தம் குதிரைப் படைகளைப் பலப்படுத்த விரும்பினார். அதற்காக அரேபியாவிலிருந்து ஆயிரம் குதிரைக் குட்டிகளைத் தருவித்தார்.

குதிரைக் குட்டிகளை அரசாங்க பொறுப்பில் வளர்ப்பதென்றால் அதிகமான ஆட்கள் தேவைப்படும். அத்துடன் செலவும் அதிகமாகும். அதனால் குறைந்த செலவில் குதிரைகளை வளர்க்கும் வழிமுறைகளைக் கண்டறிய மந்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதானிகளுடன் ஆலோசனை நடத்தினார். முடிவில் நாட்டு மக்கள் ஒவ்வொரு வரிடமும் ஒரு குதிரைக் குட்டியையும் அதன் பராமரிப்புச் செலவுக்காக நாளொன்றுக்கு மூன்று வராகன் பொன்னும் கொடுக்க வேண்டியது. அவர்கள் குதிரைகளை நல்ல முறையில் வளர்த்து பின் மன்னரிடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கிடையில் அதன் வளர்ச்சியை மூன்று மாதத்திற்கொருமுறை மன்னரிடம் காட்ட வேண்டும் என்று தீர்மானமாகியது.

அதன்படி ஒவ்வொருவருக்கும் குதிரைக் குட்டி அளிக்கப்பட்டது. தெனாலிராமனிடம் ஒரு குதிரைக் குட்டியைக் கொடுத்தார் மன்னர். அதன் பராமரிப்புச் செலவுக்கு நாளொன்றுக்கு மூன்று வராகன் பொன்னும் தடையின்றி வழங்கினார்.

குதிரைகளைப் பெற்றுச் சென்ற மக்கள் மிகவும் பயத்துடனும் அக்கறையுடனும் குதிரையைப் பராமரித்தனர். மன்னரின் நன்மதிப்பைப் பெற வேண்டுமே என்பதற்காக அவர் கொடுத்த மூன்று வாரகன் பொன்னுக்கு மேல் அதிகமாக செலவு செய்து குதிரைகளுக்கு ஊட்டமுள்ள தீனியைக் கொடுத்து வளர்த்தனர். இதனால் அவர்களுக்கு சரியான ஆகாரமும் இல்லாமல் போகவே, மெலிந்து வந்தனர். ஆனால் குதுரைகளோ கொழு என்று வளர்ந்து வந்தது.

தெனாலிராமன் அவர்களுக்கு மாறான காரியத்தைச் செய்தான், அவன் குதிரையை தன் வீட்டின் பின்புறத்தில் கட்டி நான்கு புறமும் சுவரை எழுப்பினான். அதனால் குத்ரை எங்கும் செல்ல வழ்ய்ன்ற் உள்ளேயே அடைந்து க்டந்தது. அந்த சுவர்ன் ஒரு பக்கத்த்ல் மட்டும் ஒரு துவராரம் வைத்தான். அராசாங்கம் வழங்கிய மூன்று வராகன் பொன்னை அன்றாடம் தவறாமல் பெற்று தன் குடும்பத்திற்குச் செலவிட்டான். குதிரைக்கு காய்ந்து சருகாக இருந்த புல்லை அந்த துவாரத்த்ன் வழ்யாக போடுவான். அந்த குத்ரையும் வேறு வழ்ய்ன்ற் அந்த புல்லையே த்ன்று வந்தது.

இதனால் குதிரைக்கு வேண்டிய தீனி இன்றி மிகவும் இளைத்து வந்தது. நன்றாக தின்று வந்த இராமனும் இவன் குடும்பத்தாரும் செழிப்பாக இருந்தனர்.

மூன்று மாதம் சென்றது. அரசரின் நிபந்தனைப்படி அனைவரும் தத்தம் குதிரைகளை அரசரின் பார்வைக்குக் கொண்டு வந்தனர் அரசன் ஒவ்வொரு குதிரைகளாகப் பார்வையிட்டார். குதிரைகளை வளர்த்தவர்கள் மெலிந்தாலும் குதிரைகள் வாட்டசாட்டமாக இருந்தது. அரசருக்கு மிகவும் மகிழ்ச்சி. ஆனால், தெனாலிராமன் வளர்த்த குதிரை மட்டும் வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே அரசன் இராமனை அழைத்து, "உன் குதிரை எங்கே" எங்கே?" என்று கேட்டார். அதற்கு அவன், "அரசே! எனக்குக் கொடுத்த குதிரை மிகவும் பொல்லாதது! என்னால் பிடித்துக் கொண்டு வர இயலவில்லை. அதனால் தங்கள் குதிரைலாயத் தலைவரை அனுப்பினால் அதைப் பிடித்து வரலாம்" என்றார்.

இதைக் கேட்டதும் அரசர், "அவ்வளவு முரட்டுத்தனமாகவா வளர்த்திருக்கிறாய்" என்று வியப்புடன் கேட்டார். பின்பு அதைப் பிடித்துவர குதிரைலாயத் தலைவரை இராமனுடன் அனுப்பி வைத்தார்.

இராமனுடன் சென்ற குதிரைலாயத் தலைவர் அராபிய வர்த்தகர். அவர்தன் முகத்தில் பெரிய தாடி வளர்த்திருந்தார், அது செந்நிறத்தில் காணப்பட்டது. அவர் இராமனின் குதிரை லாயத்திற்குச் சென்றார். சுவற்றின் சந்து வழியாக குதிரையைப் பார்த்தார். அப்பொழுது அந்த குதிரை தனக்கு புல்லை கொடுக்கிறார்கள் என்று நினைத்து அவருடைய தாடியைப் பிடித்து இழுத்தது.

லாயத்தலைவர் வலிபொறுக்க முடியாமல் அலறினார் அதற்குள் உடனிருந்த காவலாளிகள் குதிரையின் பிடியிலிருந்து அவரைக் காப்பாற்ற முயற்சித்தனர். முடியவில்லை. லாயத்தலைவர் மேலும் துடித்து அலறினார். அதனால் அவருடைய தாடியை கத்தரித்து விட்டனா. லாயத்தலைவா தாடி போனால் போகட்டும், பிழைத்தோமே என்று மகிழ்ந்தார்.

அந்தக் குதிரை எலும்பும் தோலுமாகக் காணப்பட்டது. நடக்கக்கூட சக்தி இன்றி அது தள்ளாடியது. காவலாளிகள் சிலர் குதிரையை பின்னாலிருந்து தள்ள சிலர் முன்னாலிருந்து இழுத்தபடி அரசனின் முன் கொண்டு நிறுத்தினர். அதைக் கண்ட அரசர் ஆத்திரத்துடன் இராமனைப் பார்த்தார். 'இராமா! குதிரைக்கு சரியான தீனிப் போடவில்லையா? குதிரை ஏன் இப்படி இருக்கிறது? என்று கேட்டார்.

"அரசே! நான் போட்டது கொஞ்சத்தீனி தான் அதைத்தின்றே இந்தக் குதிரை இவ்வளவு திமிருடன் இருக்கிறது. லாயத் தலைவரின் தாடியை கெட்டியாகப் பிடித்து விடவில்லை. அத்துடன் இதை ஒருவரால் இழுத்து வரமுடியவில்லை. முன்னாலும் பின்னாலும் காவலாளிகள் இருந்து மிகவும் சிரமப்பட்டு இழுத்து வந்துள்ளனர். இதற்கு மேல் நான் தீனியைப் போட்டிருந்தால் என்னவாகியிருக்கும்?" என்று கூறியபடி சிரித்தான்.

மேலும் தொடர்ந்து "அரசே ஒரு நாட்டின் இராணுவத்தைப் பலப்படுத்துவதும் குதிரைகளை வளர்ப்பதும் மட்டுமே ஒரு மன்னரின் கடமை இல்லை. அதைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் நலனில் அதிக கவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகும். தங்களின் உத்தரவுப் படி. மக்கள் தங்கள் உணவைக் குறைத்து குதிரைகளை வளர்த்துள்ளனர் இதனால் அவர்கள் மெலிந்துள்ளனர். இது நாட்டுக்கு மிகவும் கேடானது இல்லையா'' என்று நயமாகக் கூறினான். அவன் கூறியதிலும் ஓர் உண்மை இருப்பதை உணர்ந்த மன்னர் மௌனமானார்.

## கூன் நிமிர்ந்தது

விஜயநகரத்துக்கு ஒரு கபட சன்னியாசி வந்தான் அவன் நாகதாளிப் பழத்திலிருந்து மருந்தை தயாரிக்கத் தெரிந்திருந்தான். அது போதை தரவல்லது. அத்துடன் விஷத்தன்மையும் கொண்டது. இம்மருந்தை மக்களிடம் விற்று பொருள் சேர்க்க விரும்பினான். அதனால் நகரத்திலிருந்த ஒரு சலவைத் தொழிலாளியிடம் நட்பு கொண்டான் அவன் ஒரு கூனன்

கூனனின் உதவியால் நகர் மக்களின் வீடுகளுக்குச் சென்று தன்னிடமுள்ளது தெய்வீக சக்திவாய்ந்த சித்த மருந்து என்று கூறி போதை மருந்தை விற்க முற்பட்டான். அவன் கூறியதை உண்மையென்று நம்பிய சில மூடர்கள் அதிக விலைகொடுத்து அம்மருந்தை வாங்கி சாப்பிட்டனர்.

விஷமான அம்மருந்திருந்தினால் சிலர் உயிரிழக்க நேரிட்டது பலர் மூளை கலங்கி வெறிபிடித்து அலைந்தனர் இருந்தும் அந்த சன்னியாசி தன் வியாபாரத்தைத் தொடர்ந்து செய்து வந்தான். நிறைய பொருளைச் சேர்த்து வந்தான்.

இந்த சங்கதி தெனாலிராமனுக்குத் தெரிந்தது. அவன் அந்த சன்னியாசி மீது ஆத்திரங்கொண்டான். 'ஒன்று மறியாத மக்களை மருந்தைக் கொடுத்து பாழ் படுத்துகிறானே! அப்பொழுது நகரத்தில் சன்னியாசி கொடுத்த மருந்தை சாப்பிட்டதால் ஒருவன் பைத்தியக் காரனாக கொலைவெறிப் பிடித்தவனாக அலைந்து திரிந்து வந்தான். இது தெனாலிராமனுக்குத் தெரியும் அதனால் இராமன் சன்னியாசியிடம் தந்திரமாகப் பேசி அவனை பைத்தியக் காரனிடம் சிக்க வைத்தான் அவ்வளவுதான்! கொலை வெறிப்பிடித்திருந்த அவன் சன்னியாசியை அடித்தும் மண்டையை உடைத்தும் கொன்று விட்டான்.

இந்த சங்கதி இராஜகுரு தர்த்தாச்சாரிக்குத் தெரிய வந்தது. தெனாலிராமன் மீதிருந்த பழியைத் தீர்த்துக் கொள்ள இதுவே சமயமென்று எண்ணி அவர் அரசனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிட்டார் "அரசே, ஏது மறியாத சன்னியாசியை பைத்தியக்காரனிடம் தள்ளி அவர் உயிரிழக்க காரணமாக இருந்தான் இராமன்! அதனால் அவன் செய்த குற்றத்திற்கு தண்டனை வழங்கவேண்டும்" என்றார்.

அரசருக்கும் தெனாலிராமன் போக்கு ஆத்திரமூட்டுவதாகவே இருந்தது. அதனால் தெனாலிராமனை மண்தரையில் கழுத்தளவு புதைத்து யானைக்காலால் இடறச் செய்து கொல்லுமாறு கட்டளையிட்டார். இராஜகுருவுக்கு இது மகிழ்ச்சியாக இருந்தது.

அரசர் கூறியவாறே காவலாளிகள் தெனாலிராமனைப் பிடித்தனர். பொது இடத்தில் மண் தரையில் கழுத்தளவு ஆழம்வரை குழிவெட்டி அவனை அதனுள் இறக்கினர். சுற்றிலும் மண்ணைப் போட்டு இறுக மூடினர். அவன் கழுத்து மட்டும் வெளியில் தெரிந்தது பின்பு யானையை அழைத்துவர காவலாளிகள் சென்றனர்.

அந்த சமயத்தில் சன்னியாசிக்கு உதவி புரிந்த கூனனான சலவைத் தொழிலாளி அந்தப் பக்கம் வந்துக் கொண்டிருந்தான். அவனைப்பார்த்ததும் தெனாலிராமனுக்கு இன்னொரு யோசனை உதிர்ந்தது நகரத்தில் பலர் போதை மருந்துக்கு பலியாகக் காரணமாக இருந்தவன் இந்த சலவைத் தொழிலாளியே ஆகும். அதனால் இவனும் தண்டனைப் பெற வேண்டியவனே என்று தீர்மானித்தான்.

அதனால் இராமன் அவனை அழைத்தான். சலவைத் தொழிலாளி அருகில் வந்து தலை மட்டும் வெளியே தெரிய இருந்த இராமனை வியப்புடன் நோக்கினான். அவனுக்குக் காரணம் புரியவில்லை.

இராமன் தந்திரமாக, "ஐயா! நான் கூனன். அதைப் போக்க எத்தனையோ வைத்தியம் பார்த்தேன். ஒன்றாவும் போக்கிக்கொள்ள முடியவில்லை. கடைசியில் ஒரு சித்தர் வந்தார். கூனைப் போக்கிக்கொள்ள இம்மாதிரி குழியினுள் இருக்கவேண்டும் என்று அவர்தான் சொன்னார். நானும் அவ்வாறே இருந்து விட்டேன். இப்போது என் கூன் நிமிர்ந்து விட்டதா என்பதைப் பார்க்கவேண்டும். அதனால் நான் வெளியே வர உதவ வேண்டும் என்று கூறினான்.

கூனனும் இதை உண்மையென்று நம்பி உதவினான். தெனாலிராமன் வெளியில் வந்து பார்த்து வியப்பும் மகிழ்ச்சியும் கலந்த குரலில், "ஆஹா! என்ன ஆச்சரியம்! என் கூன் நிமிர்ந்து விட்டதே" என்ற துள்ளினான்.

இதைப்பார்த்த சலவைத் தொழிலாளிக்கு ஆசை தோன்றியது. இவனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல நாமும் இருந்தால் கூன் நிமிர்ந்து விடுமே என்று எண்ணத்தில், "ஐயா! நானும் கூனனாக இருக்கிறேன். அதனால் என்னை நீங்கள் குழியில் இறக்கிவிட்டால் நானும் உங்களைப் போன்று குணமடைவேன். இந்த உதவியைச் செய்வீர்களா? என்று நயமுடன் கேட்டான்.

"அதற்கென்ன! இப்பொழுதே செய்கிறேன் என்று கூறியபடி இராமன் அவனைக் குழியில் இறக்கி மண்ணில் இறக்கி விட்டான். சிறிது நேரத்தில் காவலாளிகள் யானையுடன் வந்து கூனனை யானைக் காலால் இடறச் செய்தனர். அவன் அலறியபடி இறந்தான்.

தெனாலிராமனுக்கு மேலும் பயம் அதிகமாகியது. இந்த நிகழ்ச்சி அரசருக்குத் தெரிந்தால் மேலும் ஆத்திரம் கொள்வாரே என்று அஞ்சினான். அதனால் தன் நம்பிக்கைக்குரிய ஒருவனிடம், சன்னியாசியால் மக்களுக்கு நேர்ந்த தொல்லைகளைப்பற்றி அரசருக்கு விவரமாகக் கூறும்படி அனுப்பிவைத்தான். அவனும் அவ்வாறே கூற அரசர் இராஜகுருவின் பேச்சைக் கேட்டு இராமனைக் கொன்று விட்டோமே என்று வருந்தினார்.

அப்பொழுது இராமனே அவர்முன் வந்து, மன்னிப்புக் கேட்டான். சன்னியாசிக்குக் கூனனும் உடந்தையாக இருந்தான். அதனால் அவனையும் பழிவாங்கவேண்டியதாயிற்று. இருந்தாலும் தனக்கு அவன் உதவி புரிந்ததால் தான் உயிர் பிழைக்க முடிந்தது. ஆகவே தனக்காக உயிரிழந்த கூனனின் குடும்பத்திற்கு மாதாமாதம் பணம் கொடுக்கவேண்டுமென்று அரசரிடம் கேட்டுக் கொண்டான். அரசரும் அதற்கு இணங்கினார்.

## சோதிடர் கூறிய பொய்

கிருஷ்ண தேவராயர். பீஜப்பூர் மன்னர் மீது போர்த்தொடுக்க முற்பட்டார். தம் படைகளை துங்கபத்திரை நதியை தாண்டி சென்று பகைவரை வெற்றிக் கொள்ள சகல ஏற்பாடும் செய்துவிட்டார். இந்த நிலையில் பீஜப்பூர் மன்னன் தோல்வியடைவது நிச்சயமாகி விட்டது.

அதனால் பகைவன் ஒரு தந்திரம் செய்து இராமரிடமிருந்த தப்பித்துக் கொள்ள எண்ணினான். அதன்படி இராமர் அவையிலிருந்த சோதிடனை தனக்கு சாதகமாக பொய் சொன்னால் ஏராளமான பொருள் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிடனும் அடி பணிந்தான்.

இதுவரை அசரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்த சோதிடன் அரசரிடம் சென்றான். "அரசே, தாங்கள் படையெடுத்து வந்துள்ள காலம் சரியாக எனக்குத் தோன்றவில்லை. ஒரு வருடக் காலத்திற்கு தாங்களோ, தங்கள் படையோ துங்கபத்திரை நதியைத்தாண்டிச் செல்வது நல்லதில்லை என்று சோதிடம் கூறுகிறது, அப்படியும் மீறி செல்ல நேர்ந்தால் தங்களுக்கு மரணம் ஏற்படும்" என்று கூறினான்.

இதுவரை நடந்தையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த தெனாலிராமன் சோதிடனின் சூதான பேச்சை உணர்ந்தான். அத்தோடு அரசரின் அறிவிப்பையும் கேட்டு உடனே சோதிடனின் முன்னால் சென்றான்.

"சோதிடரே! நீர் சோதிடத்தில் வல்லவர் என்பது எனக்குத் தெரியும். மற்றவர்களின் ஆயுளை கணித்து கூறும் உங்களுக்கு உங்கள் ஆயுளைப் பற்றியும் தெரிந்திருக்கும். அதனால் நீங்கன் இன்னும் எத்தனை ஆண்டுகள் உயிரோடு இருப்பீர்க்கள்" என்று கேட்டான்.

அதைக் கேட்டதும் சோதிடன் பெருமையாக. "இன்னும் முப்பது ஆண்டுகள் நான் உயிரோடு இருப்பேன்" என்று கூறினான். உடனே ராமன் தன்வாளை உருவி. "உன்னுடைய ஆயுள் இப்பொழுது முடியப் போகிறது." என்று கூறி சோதிடனின் தலையை வெட்டி வீழ்த்தினான். சோதிடர் கூறிய கூற்றைப் பொய் என்று சபையினரின் முன் நிரூபித்துக் காட்டினான் இராமன். அதற்கு பின்னர் மன்னர் தாம் திட்டமிட்டபடி துங்கபத்திரை நதியைத்தாண்டி படையைச் செலுத்தி பீஜப்பூர் மன்னரை வெற்றிக் கொண்டு புகழோடு திரும்பினார். இந்த மாபெரும் வெற்றிக்கு தெனாலிராமனே காரணமாகும் என்று பாராட்டி அவனுக்கு இலட்சம் பொன் பரிசு கொடுத்து கௌரவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவொளி
# சிறுவர் இலக்கிய கதைத் தொடரில்
# வெளிவரும் நூல்கள்



அலிபாபாவும் நாற்பது திருடர்களும்

தென்னாலி இராமன் கதைகள்

அலாவுதீனும் அற்புத விளக்கும்



பஞ்ச தந்திரக் கதைகள்

பரமார்த்த குருவும் சீடர்களும்

சிறுவர் கதைக் களஞ்சியம்

மேற்காணும் நூல்கள் யாவும் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு ஏற்ற முறையில் எழுதப்பட்டுள்ளது.

இவ் அறிவொளிப் புத்தகப்பார்சல் சிறுவர்களுக்கு பிறந்தநாள் பரிசாக கொடுப்பதற்கு மிகச் சிறந்த தொகுதியாகும்.

வெளியீடு....

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27 FIRST FLOOR, COLOMBO
CENTRAL SUPER MARKET COMPLEX,
P.O. BOX NO: 162, COLOMBO - 11.
TELE: 434770, 074 - 718592.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org